# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 12,185 — 1960 අගෝස්තු 19 වැනි සිකුරාදා — 19.8.1960**

12,185 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 19 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் |
|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும்.. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 609 |
| விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| இலங்கை அரசாங்கக் கணக்கு விபரங்கள் .. | — |
| வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 609 |
| மானுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| "மதுவரிச் சட்ட" அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

### 1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டம் கட்டளை இலக்கம் 152

1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 (1) (i) ம் பிரிவினுல் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் ரிக்கிரி பண்டார இலங்கரத்ன, வர்த்தக, வியாபார, உணவு, கப்பற் போக்குவரத்து அமைச்சர் ஆகிய யான் இக்கட்டளையால்,

(1) எத்தொகையான ஈர வெண்காயத்தையும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து யாழ்ப்பாணப் பகுதி பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி, யிடமிருந்து உத்தரவுச்சீட்டு இல்லாமல் ஒரு ஆள் 7 இருத்தல் எடுத்துச் செல்வதைத் தவிர—

(அ) யாழ்ப்பாணக் குடாநாட்டின் கரைப்பகுதியில் கடலிலோ அல்லது ஏரியிலோ ஒரு குறிப்பிட்ட மூலையிலிருந்து வள்ள மூலமாகவோ பாய்க்கப்பல் மூலமாகவோ ;

(ஆ) யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து ;

(இ) பச்சிலைப்பள்ளி பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பிரிவில்;

(ஈ) தென் மராட்சி பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவின் மறவன்புலவுக் கிராம அதிகாரியினதும் . தனன் கிளப்புக் கிராம அதிகாரியினதும் பிரிவுகளிலும்,

எடுத்துச் செல்லவோ அல்லது கொண்டு செல்லவோ கூடாது எனத் தடை விதிக்கிறேன்.

இக்கட்டளையின் பொருட்டு "யாழ்ப்பாணக் குடாநாடு" என்பது பூனகரிப் பிரிவின் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பகுதியும், கரைச்சி-துனுக்காய்ப் பிரிவின் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பகுதியும் தவிர்ந்த யாழ்ப்பாண வருமான மாவட்டமாகும்.

ரி. பீ. இலங்கரத்ன,
வர்த்தக, வியாபார, உணவு,
கப்பற் போக்குவரத்து அமைச்சர்.

கொழும்பு,
1960 ம் ஸ்ரீ ஆவணி மீ 10 ந உ.

---

### இலங்கை பாராளுமன்ற தேர்தல்கள் பேரவைக் கட்டளை. 1946

தேர்தற் றெகுதி இல. 135—யட்டியந்தொட்ட

இலங்கை (பாராளுமன்ற தேர்தல்கள்) பேரவைக் கட்டளை, 1946, 71 (1) ம் பிரிவின் பிரகாரம் மேற்கூறிய தேர்தல் சம்பந்தமான அபேட்சகர் திரு. சிவசிரகுமார மித்திரரத்தின முனசிங்க அவர்களின் தேர்தல் செலவைக்குறித்த அறிக்கையும் மற்றும் அவ்வறிக்கையின் நிமித்தம் சத்திய பிரமாணங்களும் 1960 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 10 ந் திகதி எனக்குக் கிடைத்துள்ளன என்றும் அப்பிரமாணங்களேயும் அறிக்கையையும் ரூபா ஒன்று 1/- கட்டியபின் தேர்தற் கந்தோர், கச்சேரி கேகாலேயில் கந்தோர் நேரங்களில் இவ்வறிக்கை அரசினர் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 6 மாதகாலம் வரை பார்வையிடலாமெனவும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

டபிள்யு. ரி. ஜயசிங்க,
தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்,
தேர்தற் றெகுதி இல. 135—யட்டியந்தொட்ட.

கேகாலை கச்சேரி,
1960 ம் ஸ்ரீ ஆகஸ்டுமீ 12 ந உ.

---

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

விலங்கின மரவின பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பெற்ற பிரமாணங்களின் ஆருவது பிரமாணத்தின் கீழ் உருகுணே தேசிய நந்த வனத்தினுள் 1960 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 1 ம் திகதியிலிருந்து 30 ம் திகதி வரை பொது மக்கள் பிரவேசிக்க உத்தரவு அளிக்கப்பட மாட்டாது என இத்தால் விளம்பரம் செய்யப்படுகிறது.

யோ. அ. த சில்வா,
பாலகர், வனஜந்து
பரிபாலனப் பகுதி.

கொழும்பு,
1960 ம் ஸ்ரீ ஆவணி மீ 10 ந உ.

---

### வாகனப் போக்குவரத்துக்குப் பாலம் மூடப்படுதல்

மட்டக்களப்பிலிருந்து பொலநறுவைக்குச் செல்லும் வீதியில், 49 ம், 50 ம் கட்டைகளுக்கிடையிலிருக்கும் மன்னம்பிட்டி வீதிப்பாலத்தை நண்ணியுள்ள சிறுப்பர்கட்டைகளை மாற்றுவதற்காக, மேற்படி பாலம் 21.8.60 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் நள்ளிரவு 12 மணிவரையும் வாகனப் போக்குவரத்துக்கு மூடப்பட்டிருக்கும்.

---

### இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதி

புகையிரதக் கடவைத் திருத்தங்கள்

130 மைலில் 05 சங்கிலியில் முருங்கன், மாதோட்டம் ஆகிய இரு புகையிரத நிலையங்களுக்குமிடையில் குறுக்கிடும் அரசாங்க கட்டுவேலைப் பகுதியினரின் மன்னர்-மதவாச்சி வீதியிலுள்ள புகையிரதக் கடவை 25.8.60 வியாழக்கிழமை காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை புதுப்பிக்கப்படும்.

மேற் குறிப்பிட்ட காலத்தில் வாகனப் போக்குவரத்து யாவும் இப்புகையிரதக் கடவைக்கு அண்மையில் தற்காலிகமாகப் போடப்படும் புகையிரதக்கடவையால் நடைபெறலாம்.